# பெற்றோர்/பாதுகாவலர்கள் மற்றும் இளைஞர்களுக்கான தகவல்

பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு வணக்கம்,

நமது பள்ளி இந்தக் கல்வியாண்டில் Healthy Youth Survey (HYS)-இல் பங்கேற்கவுள்ளது. Washington State-இல் உள்ள இளைஞர்கள் 2002-ஆம் ஆண்டு முதல் HYS-இல் பங்கேற்று வருகின்றனர். இந்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்கும் இளைஞர்களின் எண்ணிக்கை, சில ஆயிரங்களிலிருந்து இப்போது ஆண்டுக்கு 215,000-க்கும் அதிகமாக வளர்ந்துள்ளது! இந்தக் கருத்துக்கணிப்பு, இளைஞர்களின் நலம், சமூக உறவுகள், மனநலம், போதைப்பொருள் பயன்பாடு, காயம் ஏற்படுவதற்கான அபாயங்கள் மற்றும் பலவற்றைப் பற்றிக் கேட்கிறது.
சமூகங்கள், மாவட்டங்கள், பள்ளிகள் மற்றும் பொதுச் சுகாதார முகமைகள், இளைஞர்களின் நல்வாழ்வை ஆதரிப்பதற்கான கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதற்கு இந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகளைப் பயன்படுத்துகின்றன. HYS என்பது, நமது மாநிலத்தின் எதிர்காலத்தை வழிகாட்ட இளைஞர்களுக்குக் கிடைக்கும் ஒரு மிக முக்கியமான வழியாகும்.
**உங்கள் பிள்ளையின் பங்கேற்பு பெரிதும் பாராட்டப்படுகிறது**. ***தயவுசெய்து இந்தத் தகவலை உங்கள் பிள்ளையுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*** பின்பு, இந்தக் கருத்துக்கணிப்பைப் பற்றிப் பேசி, உங்கள் பிள்ளை இதில் பங்கேற்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்யுங்கள்.

## மேலும் அதிக தகவல் தேவையா?

கருத்துக்கணிப்பின் நோக்கம் அல்லது அதன் நடைமுறைகள் குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், Healthy Youth Survey -இன் முதன்மை ஆய்வாளரை (877) HYS-7111 என்ற எண்ணில் அல்லது **healthy.youth@doh.wa.gov**. என்ற மின்னஞ்சல் வழியாகத் தொடர்புகொள்ளவும். Healthy Youth Survey பற்றிய கூடுதல் தகவல்களை **www.AskHYS.net** என்ற இணையதளத்தில் காணலாம்.

இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ள Healthy Youth Survey-இன் நடைமுறைகளுக்கு Washington State Institutional Review Board ஒப்புதல் அளித்துள்ளது. இது குறித்து நீங்கள் மேலும் அறிந்துகொள்ள: **www.askhys.net/HYS2025 IRB Requirements**

இந்த நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என நீங்கள் கருதினால், தயவுசெய்து 1-800-583-8488 என்ற எண்ணை அழைக்கவும். உங்கள் பெயரைத் தெரிவிக்க வேண்டியதில்லை. அனைத்து செய்திகளுக்கும் பதில் அளிக்கப்படும்.

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**கேள்வி**: **இந்த கருத்துக்கணிப்பில் கலந்து கொள்ள யாரெல்லாம் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்?**
**பதில்:** Washington State முழுவதும் உள்ள 6, 8, 10, மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களும், சிறிய பள்ளி மாவட்டங்களில் உள்ள 7, 9, மற்றும் 11-ஆம் வகுப்பு மாணவர்களும்.

**கேள்வி: இந்த கருத்துக்கணிப்பு தன்னார்வமானதா?**
**பதில்:** ஆம்! கருத்துக்கணிப்பில் பங்கேற்கும் மாணவர்கள், தாங்கள் விரும்பாத கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் தவிர்க்கலாம், மேலும் எப்போது வேண்டுமானாலும் கருத்துக்கணிப்பில் பங்கேற்பதை நிறுத்திக்கொள்ளலாம். உங்கள் பிள்ளை இந்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்பதை நீங்கள் விரும்பவில்லை எனில், பள்ளிக்குத் தொலைபேசியில் அழைத்து அவருக்கு விலக்கு அளிக்கக் கோரலாம். மாணவர்கள் தாங்கள் இந்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்க விரும்பவில்லை என்பதைத் தங்கள் ஆசிரியரிடமும் தெரிவிக்கலாம். கருத்துக்கணிப்பில் பங்கேற்காத மாணவர்கள், நூலகத்தில் படித்தல் அல்லது வாசித்தல் போன்ற மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்காததால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. உங்கள் பிள்ளையின் தரமதிப்பீடுகள் பாதிக்கப்படாது.

**கேள்வி: கருத்துக்கணிப்பில் என்னென்ன கேள்விகள் அடங்கியிருக்கும்?**
**பதில்:** கருத்துக்கணிப்புக் கேள்விகள், நாடு தழுவிய அளவிலும் Washington-இலும் நடத்தப்படும் பிற ஆய்வுகளிலிருந்து எடுக்கப்பட்டவை. பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள், கேள்விகளை **https://www.askhys.net/Resources/Survey Questionnaires**. என்ற இணையதளத்தில் பார்வையிடலாம்.

பின்வரும் சில தலைப்புகள் அதில் அடங்கும்:

- மக்கள்தொகையியல் விவரங்கள்: வயது, பாலினம், இனம் மற்றும் மரபினம் போன்றவை.
- பள்ளி மற்றும் சமூகம் குறித்த உணர்வுகள்
- பெற்றோர், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாருடனான உறவுகள்
- உடற்பயிற்சி மற்றும் உணவு கிடைக்கும்தன்மை
- சுகாதாரக் கல்வி
- போதைப்பொருள் பயன்பாடு
- பாதுகாப்பு மற்றும் வன்முறை தொடர்பான நடத்தைகள் மற்றும் உணர்வுகள்
- பாலின அடையாளம்[1]
- பாலியல் நாட்டம் (6 மற்றும் 7-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அல்ல)
- பாலியல் நடத்தை மற்றும் வன்முறை (6 மற்றும் 7-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அல்ல)[2]

**கேள்வி: கருத்துக்கணிப்பு முடிவுகளை யார் அணுக முடியும்?**
**பதில்:** தனிப்பட்ட மாணவர்களின் பதில்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, பள்ளிகள் மற்றும் மாவட்டங்களுக்கான அறிக்கைகளாகத் தொகுக்கப்படுகின்றன. இந்த அறிக்கைகள் கண்காணிப்பாளர்கள் மற்றும் முதல்வர்களுக்கு வழங்கப்படும். மாவட்ட, பிராந்திய Educational Service Districts (ESD), மற்றும் மாநில அளவிலான அறிக்கைகள் [AskHYS.net](AskHYS.net). என்ற இணையதளத்தில் பொதுவில் பகிரப்படுகின்றன.

Department of Health-ஆல் நிர்வகிக்கப்படும் தரவுப் பகிர்வு ஒப்பந்தத்தின் கீழ், உள்ளூர் சுகாதாரத் துறைகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட தரவுப் பயனர்களின் கோரிக்கையின் பேரில், தனிப்பட்ட பதில்களைக் கொண்ட தரவுத்தொகுப்புகள் அவர்களுக்கு வழங்கப்படும்.

**கேள்வி: பங்கேற்பாளரின் அடையாளம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?**
**பதில்:** HYS கருத்துக்கணிப்பில் அளிக்கப்படும் தனிப்பட்ட பதில்களின் ரகசியத்தன்மைக்கு முழுமையாக உத்தரவாதம் அளிக்க முடியாது. அங்கீகாரம் இல்லாத ஒருவர் தனிப்பட்ட கருத்துக்கணிப்பு முடிவுகளைப் பார்க்கும் அரிதான சூழல் ஏற்பட்டால், பள்ளி, வகுப்பு, இனம்/மரபினம் போன்ற விவரங்களையும், பிற தகவல்களையும் கொண்டு சில பங்கேற்பாளர்களை அடையாளம் காண வாய்ப்புள்ளது.

இருப்பினும், HYS பங்கேற்பு என்பது முற்றிலும் தன்னார்வ அடிப்படையிலானது. பங்கேற்பாளர்களின் தனியுரிமையையும் ரகசியத்தன்மையையும் பாதுகாக்க நாங்கள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்:

- பங்கேற்பாளர்கள் கருத்துக்கணிப்பில் தங்கள் பெயர்களைக் குறிப்பிடுவதில்லை. மேலும், ஒரு குறிப்பிட்ட கருத்துக்கணிப்பை ஒரு குறிப்பிட்ட பங்கேற்பாளருடன் தொடர்புபடுத்துவதற்கான எந்தக் குறியீடுகளும் சேகரிக்கப்படுவதில்லை.
- பங்கேற்பாளர்கள் மின்னணு வழியிலான கருத்துக்கணிப்புத் தளத்தில் பங்கேற்கின்றனர். பதில்கள் அனைத்தும், வரையறுக்கப்பட்ட அணுகலுடன் கூடிய பாதுகாப்பான சர்வரில் சேமிக்கப்படுகின்றன.

**கேள்வி: கருத்துக்கணிப்பு முடிவுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன**?
**பதில்:** பள்ளிகள், பள்ளி மாவட்டங்கள், சமூகங்கள் மற்றும் பொதுச் சுகாதார முகமைகள், Washington இளைஞர்களைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கும் இந்த முடிவுகளைப் பயன்படுத்துகின்றன. இந்த முடிவுகள், மானிய நிதி பெறுதல், திட்டங்கள் மற்றும் கொள்கைகளைத் திட்டமிடுதல், அவற்றை மதிப்பீடு செய்தல் போன்ற பல தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

Healthy Youth Survey, பின்வரும் மாநில முகமைகளின் ஆதரவுடன் நடத்தப்படுகிறது: Health Care Authority - Division of Behavioral Health and Recovery, Department of Health, Office of the Superintendent of Public Instruction, மற்றும் Liquor and Cannabis Board.

[1]8-ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள் மட்டுமே இந்தக் கேள்வியைப் பெறுவார்கள். விரும்பும் பள்ளிகள், இளம் வயது மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பாலினம் குறித்த கேள்வியை 6-ஆம் மற்றும் 7-ஆம் வகுப்புக்கான கருத்துக்கணிப்பில் சேர்த்துக்கொள்ளலாம்.
[2]பாலியல் நடத்தை மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான கேள்விகளைக் கேட்பதிலிருந்து விலக்கு அளிக்குமாறு பள்ளிகள் கோரலாம்.